**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.70/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தணிகாசலம் | மதம் | : இந்து |
| த/பெ | : பக்தவச்சலம் | ஜாதி | : -- |
| வயது | : 43 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் | : MRF ஒப்பந்த பணியாளர் | வட்டம் | : திருத்தணி |

**25.03.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்திற்கு என் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் இல்லை என்றால் சரிதான். என் தாத்தா பெயரில் அடங்கல் உள்ளது. வழக்கு சொத்திற்கு என் பெயரில் பதிவு செய்த கிரைய ஆவணங்களோ, வேறு உரிமை ஆவணங்களோ இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்திற்கான பட்டா 1ம் பிரதிவாதி நடராஜன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் பட்டா பி.வா.சா.ஆ 1 அக குறியீடு செய்யப்படுகிறது)** ஆனால் அந்த இடத்தில் 40 –50 வருடங்களாக நாங்கள் தான் வசிக்கிறோம். வீட்டு வரி, மின் வரி ரசீது என் அப்பா பெயரில் உள்ளது. எனக்கு தமிழ் படிக்க தெரியும் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தில் வீடு இருப்பதாகவோ, வீட்டின் அடியளவுகளையோ நான் எனது பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் ஆணையரை வைத்து அளந்தேன். என்னிடம் காட்டப்படும் பிராதின் சொத்து விவரத்தில் வீடோ, வீட்டின் அடியளவுகளோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வீட்டு வரி ரசீதுகள் கதவு எண்.3/61, 3/27 நடராஜன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் வீட்டு வரி ரசீதுகள் பி.வா.சா.ஆ 2 முதல் பி.வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நடராஜன் கதவு எண்.61 ல் உள்ளார். நான் கதவு எண்.3/62 ல் குடியுள்ளேன். புல எண்.292/1 சி ல் நாங்கள் உள்ளோம். புல எண்.292/1 பி ல் நடராஜன் உள்ளார்.

3. நான் கதவு எண்.3/62 ல் குடியிருப்பதாக சொல்லியிருப்பதில் கதவு

எண்.3/28 க்கு நான் வீட்டு வரி ரசீது தாக்கல் செய்திருந்தால் அது பொய்யான ஆவணம் என்றால் நான் கதவு எண்.3/62 க்கும் வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள கதவு எண்.3/28 க்குரிய வரி ரசீதுகள் எனக்குரியது இல்லை என்றால் சரிதான். புல எண்.292/1 ல் 20 செண்ட் என் முன்னோர்களுக்கு சொந்தம் என்பதை காட்ட பட்டாவோ, வேறு ஆவணங்களோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கண்ணம்மா நாயுடு பெயரிலும் பட்டாவோ வேறு பதிவு செய்த ஆவணங்களோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. அ.வ.எண்.54/2015 ல் இந்த வழக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். அ.வ.எண்.54/2015 பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். 2015 ல் என் அப்பா உயிருடன் இருக்கும் போது அ.வ.எண்.54/2015 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி நடராஜனுக்கு சொந்தமானது என்பதால்தான் அ.வ.எண்.54/2015 ல் இந்த வழக்கு சொத்தை என் அப்பா சேர்க்கவில்லை என்றால் என் அப்பா சேர்த்துள்ளார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி நடராஜனுக்கு சொந்தமானது என்பதால்தான் அ.வ.எண்.54/2015 ல் இந்த வழக்கு சொத்தை என் அப்பா சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அதற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்மந்தமேயில்லை.

5. புல எண்.292/1A பொது வழியின் நீள அகலம் நான் குறிப்பிட்டு எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நீதிமன்ற ஆணையரும் அளந்து காட்டியுள்ளார். புல எண்.292/1A பொது வழியின் நீள அகலம் எனது பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புல எண்.292/1A பொது வழி என்பதை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி அமைதியாக நின்றார். புல எண்.292/1A பொது வழி என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நடராஜன் வழக்கு சொத்தை அளவீடு செய்ய தனிப்பட்ட முறையில் பணம் கட்டியிருந்தார் என்றால் ஆமாம். நில அளவையர் அளக்கும்போது நான் பிரச்சனை செய்ததால் அவர்கள் அளக்காமல் சென்றுவிட்டனர் என்றால் நான் எந்த பிரச்சனையும் செய்யவில்லை வருவாய்

கோட்டாட்சியரிடம் கொடுத்த பட்டா மாறுதல் மனுவை மட்டும் காட்டினேன். அவர்கள் அதை பார்த்தவுடன் திரும்ப சென்றுவிட்டார்கள். நில அளவையர் அளக்கும்போது நான் பிரச்சனை செய்ததால் அவர்கள் அளக்காமல் சென்றுவிட்டனர் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த பட்டா மாறுதல் மனுவை மட்டும் காட்டினேன். அவர்கள் அதை பார்த்தவுடன் திரும்ப சென்றுவிட்டார்கள்.

7. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே சொத்து சம்மந்தமாக எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் என் அப்பா இருந்தவரை 2017 வரை பிரச்சனை எதுவும் இல்லை. என் அப்பா இறந்தவுடன் பட்டா தன் பெயரில் இருப்பதால் எழுதி தரமாட்டேன் என அவர் பிரச்சனை செய்தார். 2017 ல் இருந்தே பிரச்சனை உள்ளது என்றாலும் நான் இந்த வழக்கை 2022 ல்தான் உறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் என் அப்பா இறந்தவுடன் பிரச்சனை வந்ததால் நான் வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்துவிட்டேன். 2017 ல் நான் வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தாக கூறியுள்ளதற்கு ஆதரவாக அந்த மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

8. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் 2017 ல் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றாலும் 20.09.2021 ல்தான் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்துள்ளேன் என்றாலும் சரிதான். அந்த மனுவும் புல எண்.292/1 சி –க்குதான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் 2017 ல் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2017 ல் இருந்தே பிரச்சனை உள்ளது என்றாலும் நான் இந்த வழக்கை 2022 ல்தான் உறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்துள்ளதில் இவ்வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)